# சங்ககால இலக்கியங்களில் யாழ் இசைக்கருவி

***திருமதி கிருபாஞ்சனாகேதீஸ்***
விரிவுரையாளர் (தகுதிகாண்)
சு.வி.அ.க.நிறுவகம், கிழக்குப்பல்கலைக்கழகம்
மட்டக்களப்பு

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5027

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்ககால இசைமரபில் இசைக்கருவிகளின் பங்களிப்பு அளப்பெரியது. அத்தோடு சங்ககால இசைக்கலைஞர்கள் இசை இசைவாத்தியம் மீட்டல் இசைக் கருவிகளை திருத்துதல் போன்ற அனைத்து விடயங்களிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். அந்த வகையில் யாழ் இசைக்கருவியானது சங்ககால இசையில் மிகவும் முக்கியமான இடத்தினை பெற்றிருந்தது. பல வகை யாழ் கருவிகள் அக்கால மக்களது வாழ்வியலோடு இணைந்ததாக பெரும் பங்கினை ஆற்றியிருந்தது. சங்ககால இசை மரபின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் யாழ் இசைக்கருவி ஓர் காரணமாக திகழ்ந்தது எனலாம்.*

***ஆய்வு முறையியல்***

*இலக்கிய மீளாய்வு, விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, ஒப்பிட்டாய்வு போன்ற ஆய்வியல் முறைகளினுடாக ஆராய்பட உள்ளது.*

***ஆய்வு எல்லை***

*சங்ககால இலக்கியங்களில் சிலவகையான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களை ஆய்வு எல்லையாகக் கொண்டது.*

***ஆய்வு மூலங்கள்***

*இதில் முதன்மை ஆய்வு மூலங்களாக எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பனவும் சங்ககாலம் சார்ந்த இசை நுல்கள் என்பனவும் ஆகும். துணை மூலங்களாக சங்ககால யாழ் பற்றி எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் என்பனவும் அடங்கும்.*

## முன்னுரை

சங்ககால மக்கள் பலவகையான இசைக்கருவிகளை உருவாக்கி அதனை இசைத்து மகிழ்ந்துள்ளனர். பொதுவாக நரம்புக்கருவிகளும் துளைக்கருவிகளும் பண்ணிசை இசைப்பதற்கு உகந்த கருவிகள் என்பது கருத்தாகும். நரம்புக்கருவிகளுள் ஒன்றான யாழ் இசைக் கருவிக்கு சங்ககால இசை உலகில் மிகச் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளமை அக்கால பாடல்கள் மூலமாக எம்மால் நன்கு உணர முடியும். அழகான உருவமைப்புக் கொண்ட யாழ் இசைக்கருவியின் இனிமையான இசையும் அதன் அமைப்பு என்பன அதனது சிறப்புக்கு காரணமாக விளங்கியுள்ளமையினை சங்கப் பாடல்கள் நன்கு எடுத்தக்காட்டுகின்றன.

யாழ் இசைக்கருவிகள் பல வகைப்படும். இருப்பினும் சங்க இலக்கியத்தில் வில்யாழ் சீறியாழ் பேரியாழ் என்பன விளக்கப்பட்டுள்ளன. எனவே சங்ககால இலக்கியத்தில் எந்த வகையிலான யாழ் இசைக்கப்பட்டது அதனது அமைப்பு முறை, இசைத் தன்மை என அதனது சிறப்புக்களையும் எடுத்துக்காட்டுக்களையும் வெளிப்படுத்துவதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

### சங்ககால இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்பன அடங்குகின்றன. எட்டுத்தொகை நுல்களில் எட்டு வகை உள்ளமையினால் அது எட்டுத்தொகை என அழைக்கப்பட்டது. அவை அகநானூறு புறநானூறு ஐங்குநூறு குறுந்தொகை நற்றினை கலித்தொகை பதிற்றுப்பத்து பரிபாடல் என்பனவாகும். புத்தப்பாட்டு அதற்குள் அடங்குவன திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை மதுரைக்காஞ்சி நெருநல்வாடை என்பனவாகும். இச்சங்க இலக்கியங்களில் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் பொருளியல் அரசியல் காதல் வீரம் நாகரீகங்கள் பழக்கவழக்கங்கள் கலைகள் என பல வகை கூறுகளை எம்மால் அறியமுடிகிறது.

கலைகளில் ஒன்றாக விளங்கும் இசை அக்கால மக்களது வாழ்வியலோடு இணைந்திருந்தமையினை எம்மால் உணர முடிகிறது. இசைக்கலைஞர்கள் இசைக் கருவிகள் இசையியல் நுணுக்கம் பண்கள் என இசைச் செய்திகள் பல வகையாக சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

### யாழ் இசைக்கருவி

நரம்புக்கருவிகளின் தொடக்ககருவியாக யாழ் இசைக் கருவி விளங்குகின்றது. மற்றும் நரம்புக் கருவிகளில் மிகச் சிறப்புக் கொண்டதாக யாழ் இசைக்கருவியை கருதலாம். யாழினது உருவக அமைப்பும் அதன் இனிமையான இசையும் அதனது பெருமைக்கு காரணமாக அமைகின்றன. யாழ் இசைக்கருவியில் பல வகைகள் இருந்துள்ளன. ஆயிரம் பேரியாழ், தும்புருயாழ் நாரதயாழ், மருத்துவயாழ் கீசகயாழ் சகோடயாழ் செங்கோட்டுயாழ் சீறியாழ், மகரயாழ் பேரியாழ் என பலவகை களாகும். இருப்பினும் சங்க இலக்கியத்தில் வில்யாழ் சீறியாழ் பேரியாழ் என மூன்று வகையான யாழ்களைக் காணக்கூடியதாக உள்ளது. அதனை எடுத்துக்காட்டுவதாக சங்க இலக்கிய பாடல்கள் உள்ளன.

வில் யாழ் கொண்டு இடையன் குறிஞ்சிப் பண்ணைப் பாடினான் என்பது ஒரு பாணன் மற்றொரு பாணனுக்கு கூறும் கருத்து அமைவதாக பெரும்பாணாற்றுப்படை நுலில் அமைந்த பாடல் கூறுவதாக

**"புழற் கோட்டுத் தொடுத்த மரல் புரி நரம்பின்**
**வில் யாழ் இசைக்கும் விரல் ஏறி குறிஞ்சி**
**பல்காற் பறவை கிளை செத்து ஓர்க்கும்**
**புல் ஆர் வியன் புலம் போகி ------**

***(பெரு - 185 - 189)***

என்று மிகவும் அழகாகக் கூறுகின்றார் உருத்திரங்கண்ணனார். பல அறிஞர்களது கருத்தும் வில்யாழ் முதலில் தோன்றியது என்பதாகும். காரணம் செடியின் நார்களை முறுக்கி நரம்பில் பயன்படுத்தப்பட்டமையால் இந்த யாழ் தொடக்க யாழாக இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது. மற்றும் சீறியாழ் சங்க இலக்கியத்தில் அதிகம் பயன்படுத்திய யாழாக விளங்குகின்றது. உருவில் சிறியதாகவும் கருமையான வளைந்த கோட்டினை உடையது என்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ் நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி என விபரிக்கப்பட்டுள்ளமை எடுத்துக்காட்டாகும்.

மேலும் பேரியாழ் என்பது உருவில் பெரியதாக இருந்திருக்க வேண்டும் என்பது பலரது கருத்தாகும். பேரியாழ் ஆனது பல உறுப்புக்களைக் கொண்டு விளங்கியதாக பெரும்பாணாற்றுப்படை நூல் குறிப்பிடுகின்றது. அதாவது பத்தர் பச்சை வறுவாய் போர்வை ஆணி திவவு பருப்பு யாப்பு உந்தி பண்நரம்பு கவைக்கடை கண்கூடு என பல உறுப்பக்களாகும்.

**"பாணர் கையது பணி தொடை நரம்பின்**
**விரல் கவர் பேரியாழ் பாலை பண்ணிக்**
**குரல்புணர் இன்னிசை தமிழ்சி பாடி**

என பேரியாழ் பற்றி குறிப்புடன் காட்டடப்பட்டுள்ளது. இவ்வாறு சங்ககால இலக்கியத்தில் காணப்படும் பிரதான மூன்று யாழின் வகைகளாக வில்யாழ் சீறியாழ் , பேரியாழ் என்பன விளங்கின என்பதாகும்.

### சங்க இலக்கியத்தில் யாழின் வகிபங்கு

சங்ககால மக்கள் தங்களது வாழ்வியலோடு இணைந்த இசையினை வாய்ப்பாட்டு இசை, கருவியிசை என வகைப்படுத்தினர். கருவியிசை எனும் போது அங்கு யாழ் இசைக்கருவியானது பிரதான இடத்தினை வகித்தமையினை அக்கால இலக்கிய பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. மேற்கூறியவாறு வில்யாழ், சீறியாழ் பேரியாழ் என யாழ் வகைகள் அங்கு தெளிவாகக் காட்டடப்பட்டுள்ளன. சங்கப் பாடல்கள் மூலமாக அதனை வெளிக்காட்டுவதாக யாழின் நரம்பொலியில் இனிய வரிப்பால்கள் எழும் எனும் செய்தியை கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

**'வளைக்கை விறலியென் பின்னனாகப்**
**பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்**
**வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்ப**
**பருமலை நின்ற பயங்கெழு சீறியாழ்**
**ஒல்க லுள்ளமொ டெரருபுடை தழீஇப்**
**(புற 135)**

மற்றும் புரியாக அமைந்த யாழ் நரம்புகள் பொன்வார்த்த அமைப்புடன் இருந்ததாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அதன் தன்மையால் அது பொன்னுக்கு அமைவானதாக கூறப்பட்டிருக்கலாம். யுடழின் ஓர் உறுப்பான பச்சை மின்னலைப் போன்று ஒளியுடைய தாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதனது இசை இன்பத்தை உண்டாக்கி எல்லோரும் விரும்பும் இசையாக விளங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனை எடுத்தக்காட்டும் பாடலாக

**'பொன்வார்ந்த தன்ன புரியடங்கு நரம்பின்**
**மின்னேர் பச்சை மிஞிற்றுக் குரல் சீறியாழ்**
**நன்மைத நிறைந்த நயவரு பாணை'**
**(புற நா - 302)**

அமைந்துள்ளமை சிறப்பாகும். யாழினை இவ்வாறு வர்ணப்படுத்தி விளக்கியமை யாழின் அம்சங்களை வெளிக்காட்டுபவையாக உள்ளது. மேலும் இனிய இசை கொண்ட யாழினை அக்கால மக்கள் மங்கல பொருளாக மதித்துள்ளமை மற்றுமொரு சிறப்பாகும். அக்கால மக்கள் தங்களது வீட்டில் யாழினை மங்கல பொருள்போன்று பேணி பாதுகாத்து வந்தமை அதன் மேலான தன்னமையை காட்டுகிறது.

**"மங்கல மகளிரோடு மாலை சூட்டி**
**இன்குர விரும்பை யாழொடு ததும்ப**
**(புற 332)**

இப்பாடல் வாயிலாக அதனை அறிந்து கொள்ள முடிகிறது.

சங்ககால மன்னர்கள் இசையை ரசித்து அதற்கு முக்கியத்துலம் அளிக்கும் மனப்பாங்கு கொண்டவர்களாக விளங்கினர். பாணர்களுக்கு பல பரிசில்களும் பொற்காசுகளும் கொடுத்து கௌரவித்துள்ளனர். இவ்வாறு அரசர்கள் இசைக்கு அளித்த ஆதரவால் இசை நன்கு வளர்ந்தது எனலாம். அதனை எடுத்துக்காட்டுவதாக அகநானுறு பாடலில் திதியன் என்ற குறு நில மன்னன் சீறியயாழ் வாசித்து சிறந்த பாணர்களுக்கு பல பரிசில்களை நாளவையில் அளித்துள்ளமையினை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

**"அருந்துறை முற்றிய கருங்கோட்டுச்**
**சீறியாழ்ப்**

**பாணர் ஆர்ப்ப பலகலம் உதவி**
**நாளவை யிருந்த நனை மகிழ் திதியன்**
**(அக - 331)**

இவ்வாறு யாழிசை கலைஞர்களை ஊக்குவித்தும் அவர்களை மகிழ்வித்தும் யாழிசை வளர்வதற்கு அக்கால அரசர்கள் பங்காற்றியமை புலப்படுகின்றது.

மற்றும் சங்ககால மக்கள் தாங்கள் வாழும் நிலங்களுக்கு ஏற்ப யாழ் அமைத்து அதனை இசைத்து வாழ்ந்துள்ளனர். அதனை எடுத்துக்காட்டுவதாக நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் சுறா மீனின் நீண்ட மருப்பை எடுத்து அதனை நன்றாக சீவி அதனைக் கொண்டு யாழினை உருவாக்கியுள்ளனர். அதனது நரம்பிற்கு நெய்தல் செடியின் நீண்ட நாரை நன்கு இணைத்து முறுக்கி அதனை யாழிசைக் கருவிக்கு நரம்பாக கட்டி இசைத்துள்ளமை கலித்தொகை பாடல் வாயிலாக எமக்கு வெளிப்படுகின்றது.

**“எறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த**
**நெய்தல் நெடுநார்ப் பிணித்தியாத்துக் கையுளர்வின்**
**யாழிசை கொண்ட இனவண் டிமிர்ந்தார்ப்ப**
**(கலி - 131)**

இப்பாடல் அடிகளிலிலருந்து மீனின் உறுப்புக் கொண்டும் யாழ் அமைத்து இசைக்கும் அளவிற்கு யாழிசை அங்கு அக்கால மக்களது வாழ்வியலோடு இணைந்தமையும் இசைக்கு அவர்களது மனங்களில் கொடுத்துள்ள இடமும் புலப்படுகின்றது. நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த நிலமுமாக கருதப்படுகிறது. எனவே அங்குள்ள மக்கள் தங்களுக்க இலகுவாக கிடைக்கும் மீன்களின் பாகங்களில் யாழினை அமைத்து மகிழ்ந்துள்ளன என வெளிப்படுகின்றமை யாழின் முக்கியத்துவத்திற்கு கிடைக்கும் சிறப்பாகும்.

யாழினது இசை அம்சங்களை மட்டுமன்றி அதன் பாகங்களும் விளக்கும் வகையில் சங்க இலக்கியம் விளங்கி காட்டுகிறது. பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை போன்றவற்றில் யாழின் பாகங்களை நன்கு எடுத்தக்காட்டியுள்ளனர். அப்பாடல்கள் வாயிலாக யாழினது தோற்றம் எவ்வாறு இருந்தது என்பது எமக்கு ஒரு அமைப்பாக விளங்கும் அளவிற்கு சொல்லப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

யாழினது பாகங்களை முழுமையாக பொருநராற்றுப்படை விளக்கியுள்ளது. ஒவ்வொரு உறுப்புக்களையும் அதற்கேற்ப உவமை கூறி அதனது அமைப்பை சுட்டிக் காட்டுகின்றது.

**“குளப்பு வழி யன்ன கவடுபடு பத்தல்**
**விளக்கழல் உருவின் விசியுறு பச்சை**
**எய்யா இளஞ்சூல் செய்யோன் அவ்வயிற்**
**றைதுமயிர் ஒழுகிய தோற்றம் போலப்**
**பொல்லாம் பொத்திய பொதியுறு போர்வை**
**அனைவாழ் அலவன் கண்கண் டன்ன**
**துளைவாய் தூவிர்ந்த துரப்பமை கணி**
**என்னாள் திங்கள் வடிவிற் றாகி**
**அண்ணா இல்லா அமைவரு வறுவாய்ப்**
**பாம்பு அணந் தன்ன ஓங்கிய மருப்பின்**
**மாயோன் முன்கை கய்நொடி கடுக்கும்**

இவ்வாறாக இப்பாடல் வாயிலாக யாழிசை பாகங்களாக பத்தல் பச்சை போர்வை கணி மருப்பு திவபு நரம்புகள் என விளக்கியுள்ளமை யாழிசை அம்சங்கள் முழுமையாக சங்ககால இலக்கியம் காட்டியமை எமக்கு புலப்படுகிறது. யாழிசை குடம் போன்ற பகுதி பொல்லாம் என்றும் அது அழகாக மூடப்பட்ட தோலினால் பொறியப்பட்டுள்ளதும் அதனது வாய்ப்பகுதி அரைவட்ட வடிவுடன் வெறுமையாக இருப்பதும் வார்கள் வளைகள் போன்று சுற்றப்பட்டிருப்பதும் நரம்புகளை தினையரிசியை வரிசையாக அடுக்கி வைத்திருப்பது போன்று உள்ளதும் என பல உவமை கூறி யாழினது பாகங்கள் காட்டப்பட்டுள்ளது. இதனால் யாழிசை அமைப்பு எல்லோருக்கும் நன்கு புலப்படுகின்றது. அதனை புலப்படவைத்த புலவன்கள் சிறப்புக்குரியவர்களாகும்.

மேலும் யாழினது இசைத்தன்மையை மிகவும் அழாகன முறையில் புலவர்கள் விளக்கியுள்ளனர். ஒருவருக்கு இன்பம் தருவது அவர் தங்களது குடும்பத்தோடு வாழ்வதே ஆகும். அத்தகைய குடும்பமாக வாழும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சியை ஒத்ததே யாழிசை என விளக்குகிறார்.

**"மாலை முன்றலில் குலுங்களல் கட்டில்**
**மனையோன் துணைவி ஆக, புதல்வன்**
**மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்**
**பொழுதிற்கு ஒத்ததன்று மன்னே**
**மென் பிணித்தம்ம - பாணனது யாழே**
***(ஐங் - 410)***

இந்த பாடல் வாயிலாக மாலைப் பொழுதில் தலைவனானவன் மனைவி மகளுடன் கட்டிலில் படுத்திருக்க தன் மகன் மார்பில் ஏறி ஊர்தலால் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு ஒப்பானதாக பாணல் யாழில் பண்ணிசைக்கும் போது ஏற்படும் மகிழ்வை போன்றது என்பதாக வர்ணிக்கப்பட்டஉள்ளது. ஆகவே யாழின் இசையின் இனிமை முழுமையான குடும்ப வாழ்கையுடன் இன்பத்தோடு இணைந்ததாகவே உணரப்படுகின்றது. இவ்வாறான கற்பனை நயத்தோடு யாழிசை ஒப்பிடும் புலமை கொண்ட புலவரின் பாடுதிறன் யாழிழசை யைப் போன்று மேலான சிறப்புக்குரியது எனலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் யாழினது ஆதிக்கமானது அதிகம் எனலாம். அந்தளவிற்கு யாழினது இசை, வகைகள், உறுப்புக்கள் அதனது சிறப்புக்கள் என பல செய்திகள் நிரம்பிக் காணப்படுகின்றன. யாழ் இசைக் கருவியானது அக்காலத்தில் வெறுமனே இசைக்கருவி என மட்டுமல்லாது பல்வேறு பயன்பாடுகளை உடையதாக அக்கால இலக்கிய பாடல்கள் எமக்கு புலப்படுத்துகின்றன. பாணர்களது வாழ்க்கையில் அதனால் பணமும் பரிசில்கழும் பெற்றுக் கொடுக்கும் தொழிற்கருவியாக தனது பங்கினை வகித்துள்ளது. மற்றும் மக்களால் தெய்வத்தன்மை பொருந்திய உயர்ந்த அந்தஸ்தை கொண்ட ஓர் கருவியாகவும் மதிக்கப்பட்டுள்ளமை தெளிவாகப் புலப்படுகின்றது.

**"ஏழ் புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை**
**யாமுழே பிறப்பினும் யாழ்க்கவைதாம்**
**என் செய்யும்**

அதாவது யாழிசையை ரசிப்பவர்களுக்கே அது உரியது. அவர்களுக்கே இன்பத்தை தரவல்லது. அதனை உணர்ந்து சுவைப்பவர் இல்லையென்றால் அதனால் எந்த பயனும் இல்லை என்பதாகும். ஆகவே இதனைப் போன்றே யாழிசை முக்கியத்துவமும் சிறப்பும் தெரிந்தவர்களால் தான் அதனை ஆழமாக படித்து அதன் மேலான அம்சங்களை வெளிப்படுத்த முடியும். அதனது பெருமை அறியாதவர்களால் எப்போதுமே அதன் சிறப்புக்களை உணரமுடியாது. எனவே இன்றைய இளம் சமூதாயத்திடையே இத்தகைய யாழ் இசைக்கருவி பற்றிய செய்தியை இந்த ஆய்வுக்கட்டுரை வாயிலாக ஓரளவேனும் தெரியப்படுத்துவதை எண்ணி பெருமையும் அதனை என்மூலமாக வெளிப்படுத்தியதை எண்ணி கர்வமும் கொள்கின்றேன். சங்ககாலம் ஓர் இசைக்கு வித்திட்ட உன்னதமான காலம் ஆகும். எனவே அதில் யாழிசைக்கருவி பெரும் பொக்கிசமாக திகழ்ந்துள்ளமை நிதர்சனமாகும். பண்ணிசைக்கும் பாட்டிசைக்கும் ஏற்ற கருவியாக யாழ் சங்ககாலத்தில் விளங்கியது. அதன் கலைத்தன்மையும் சுவைப் பெருக்கும் சங்ககால மக்களை மிகவும் கவர்ந்துள்ளமை எவராலும் மறுக்க முடியாத விடயமாகும்.

## உசாத்துணைகள்

1. வசந்தமாலா இரா தமிழரின் இசைநுகர் பழக்கம் சபாநாயகம் அச்சகம் சிதம்பரம், 1997.
2. பெருடடள் ஏ.என.; தமிழா் இசை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை 1974.

*3. கலைவாணி, இரா. சங்ககாலத்தில் இசை ஏழிசைப்பதிப்பகம் மயிலாடுதுறை, 2005.*

*4. சுந்தரம் வீ.ப.கா. தமிழ் இசைக்க லைஞ்சியம் தொகுதி - 1 பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி 2006.*

*5. கலைவாணி இரா.தொல்காப்பியத்தில் இசைத்தொன்மையும் தொடர்ச்சியும் ஏழிசைப்பதிப்பகம் மயிலாடுதுறை 2014.*

*6. நுலாசிரியர் குழுவினர் முதுநிலைப் பட்டப்படிப்பு இசை வரலாறு தொலைதூர கல்வி நிறுவனம் சென்னைப்பல்கலைக்கழகம்.*

*7. கோபிநாத்.த சங்ககால நிகழ்த்துகைக் கலைஞர்கள் முதுநுண்கலைமானி பட்டப்படிப்பு ஆய்வேடு இசைத்துறை அண்ணாமலைப்பல்களைக்கழகம் 2019.*